ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2018.10.25 |

## காணி விலைச் சுட்டெண் - 2018 முதலரையாண்டு

உண்மைச் சொத்துத் துறையின் அபிவிருத்திகளைக் கண்காணிக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது பல குறிகாட்டிகளைத் தொகுத்து பகுப்பாய்வு செய்கிறது. இதன்படி, காணி விலைச் சுட்டெண் (அடிப்படை ஆண்டு: 1998) 1998இலிருந்து 2008 வரை ஆண்டுதோறும் 2009 – 2017 காலப்பகுதியில் அரையாண்டிற்குகொரு தடவையும் தொகுக்கப்பட்டதுடன் அது கொழும்பு மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளின் 50 நிலையங்களை உள்ளடக்கியிருந்தது. உண்மைச் சொத்துத் துறையில் அண்மையில் ஏற்பட்ட அபிவிருத்திகளின் காரணமாக காணி விலைகளைக் கண்காணிக்கும் முக்கியத்துவம் அதிகரித்து வருவதனால் காணி விலைச் சுட்டெண்ணின் புவியியல் ரீதியான உள்ளடக்கப்படும் பிரதேசம் கொழும்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 82 நிலையங்களை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டிருப்பதுடன் இவ்விரிவுபடுத்தலை உள்ளடக்கும் விதத்தில் அதன் அடிப்படையாண்டு 1998இலிருந்த 2017இன் முதலரைப்பகுதிக்குத் திருத்தப்பட்டது. மேம்படுத்தப்பட்ட உள்ளடக்கத்துடன் கூடிய காணி விலைச் சுட்டெண் 2017இலிருந்து அரையாண்டுக்கொரு தடவை கிடைக்கத்தக்கதாகவுள்ளது.

காணிப் பயன்பாட்டின் பல்லினத்தன்மையைக் கருத்திற் கொண்டு ஒரே விதமான சீர்மை அமைப்பினைப் பேணுவதற்காக வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்காக அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ஒரு பேர்ச்சு வெற்றுக் காணிக்கான விலையினைப் பயன்படுத்தி மூன்று துணைச் சுட்டெண்கள் வெவ்வேறாகக் கணிக்கப்பட்டுள்ளன. இம்மூன்று துணைச் சுட்டெண்களினதும் சராசரியினைக் கருத்திற் கொண்டு ஒட்டுமொத்த காணிவிலைச் சுட்டெண் கணிக்கப்படுகிறது.

## முக்கிய உண்மைகள்

**ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் காணி விலைச் சுட்டெண் அதிகரிப்பு**

**16.3%**

**ஆண்டிற்கு ஆண்டு துணைச் சுட்டெண்களின் அதிகரிப்பு**

| | |
|---|---|
| வதிவிடம் | 16.5% |
| வர்த்தகம் | 16.8% |
| கைத்தொழில் | 15.8% |

**காணி விலைச் சுட்டெண்களுக்காக உள்ளடக்கப்படும் கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள்**




2018இன் முதலரைப்பகுதியில் கொழும்பு மாவட்டத்திற்கான மீள் அடிப்படையிலமைந்த காணி விலைச் சுட்டெண் 116.3 இனை அடைந்து 2017இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 16.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. காணி விலைச் சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களுக்குமான வதிவிட காணி விலைச் சுட்டெண், வர்த்தக காணி விலைச் சுட்டெண், கைத்தொழில் காணி விலைச் சுட்டெண் என்பன இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தன.




மேம்பட்ட உள்ளடக்கத்துடன் கூடிய மீள் அடிப்படையலமைந்த காணி விலைச் சுட்டெண் மற்றும் அதன் துணைச் சுட்டெண்களினது அசைவுகள் பொதுமக்களின் தகவலுக்காக கீழே தரப்பட்டுள்ளன.

### காணி விலைச் சுட்டெண் பெறுமதிகள் மற்றும் வளர்ச்சி வீதங்கள்

| கொழும்பு மாவட்டத்திற்கான காணி விலைச் சுட்டெண் (அடிப்படை ஆண்டு: 2017ஆ1) | 2017 1அரை | 2017 2அரை | 2018 1அரை | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் (%) (2018 1அரை) |
|---|---|---|---|---|
| வதிவிடக் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 107.0 | 116.5 | 16.5 |
| வர்த்தகக் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 107.3 | 116.8 | 16.8 |
| கைத்தொழில் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 106.0 | 115.8 | 15.8 |
| ஒட்டுமொத்தக் காணி விலைச் சுட்டெண் | **100.0** | **106.7** | **116.3** | **16.3** |